**மாதிரி வினாத்தாள் - 2020 - 21**

**SAMPLE QUESTION PAPER -2020 -21**

வகுப்பு: **பன்னிரண்டு** மொத்த மதிபெண்கள்:**80**

**(XII-STD) 106** **Maximum marks : 80**

தமிழ் கால அளவு : **3** மணி

**TAMIL** **Time Allowed : 3 Hours**

.....................................................................................................................

பகுதி அ

SECTION - A (40 MARKS

1. <u>அ.பின்வரும் உரைநடைப் பகுதியைத் தொடர்ந்து வரும் வினாக்களுக்கு உரிய விடைகளை எழுது</u> 5x1=5

சிதம்பரம் அருகே கடலோரத்தில் அமைந்துள்ள பிச்சாவரம் வனப்பகுதியில் எழில்மிகு சுரபுன்னை (மாங்குரோவ்) காடுகள் அமைந்துள்ளன. பிச்சாவரத்தின் கடற்கரை நீளம் 6 கி.மீ. . பிச்சாவரம் சதுப்பு நிலக்காடுகள் 3 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் உள்ளது. சுரபுன்னை செடிகள் இங்கு மிகுதியாக உள்ளன. பிச்சாவரம் சதுப்பு நிலக்காடுகளில் உப்பங்கழிகளும், அடர்த்தியான மாங்குரோவ் செடிகளும் உள்ளன. உப்பனாற்றில் உள்ள இக்காடுகளில் சுமார் 4,400 கால்வாய்கள் உள்ளன. ஆண்டு தோறும் மார்ச், ஏப்ரல், மே ஆகிய 3 மாதங்களில் இங்கு வெளிநாட்டுப் பறவைகள் கூட்டம், கூட்டமாக வரும். எம்ஜிஆர் நடித்த ஒரு படத்தின் படப்பிடிப்பு இங்கு நடைபெற்றதால் அங்குள்ள தீவிற்கு "எம்ஜிஆர் திட்டு' என பெயர் சூட்டப்பட்டது. கடற்கரையோரம் எம்ஜிஆர் திட்டு, சின்னவாய்க்கால், பில்லுமேடு ஆகிய 3 எழில்மிகு தீவுகள் உள்ளன. மேற்கண்ட தீவுகளில் மீனவர்கள் வசித்து வந்தனர். 2004 டிசம்பர் 26-ஆம் தேதி சுனாமிப் பேரலையின் போது மேற்கண்ட தீவுகளில் உள்ள மீனவர்கள் பெரும்பாலோர் இறந்ததால் தற்போது அங்கு மீனவர்கள் வசிக்க தடை விதிக்கப்பட்டுள்ளது.

இப்பகுதியில் மருத்துவ குணம் கொண்ட "தில்லை மரம்' என்ற வகை மரங்கள் இருந்ததாகவும், தற்போது அந்த மரவகைகள் அழிந்துவிட்டதாகவும் கூறப்படுகிறது. தில்லை மரம், தொழுநோய், ஆஸ்துமாவை குணப்படுத்தும் தாவரமாகும். தனது தொழுநோய் குணமடைய வேண்டி முதலாம் பராந்தக சோழன் தில்லை நடராஜரை வணங்குவதற்காக இங்கு வந்து தங்கினான். 45 நாட்கள் முனிவர் ஒருவரிடம் தில்லை மர

மூலிகை மூலம் சிகிச்சை பெற்று அந்நோய் குணமடைந்ததாக வரலாறு கூறுகிறது. சுரபுன்னை செடி புற்றுநோய் போன்ற கொடிய நோய்களை அழிக்கும் திறன் கொண்டது என எம்.எஸ்.சுவாமிநாதன் விஞ்ஞான ஆய்வு மையம் சோதனை மூலம் கண்டறிந்துள்ளது. இப்பகுதியில் உள்ள மீனவர்களை புற்றுநோய் தாக்குவதில்லை என அந்த ஆய்வு மையத்தினர் தெரிவித்துள்ளனர்.

**<u>வினாக்கள்</u>**

I. மாங்குரோவ் காடுகள் தமிழகத்தில் எங்கு அமைந்துள்ளன?.
 அ) சிதம்பரத்தில் ஆ) கடலோரத்தில் இ) பிச்சாவரத்தில்ஈ) நாகப்பட்டினத்தில்

II. சுனாமிப் பேரலை தமிழகத்தில் எத்தனை ஆண்டுகளுக்கு முன் வந்தது ?
 அ) 2004 ஆ) பதினாறு இ} பதினைந்து ஈ ) பதினேழு

III. தில்லை மரம் எந்நோய்களைக் குணப்படுத்தும் ?
 அ) தொழுநோய், ஆ) ஆஸ்துமா இ) தொழுநோய், ஆஸ்துமாவை ஈ) மஞ்சள் காமாலை

IV. புற்றுநோயை அழிக்கும் திறன் கொண்ட மரம் எது ?
 அ) தில்லை ஆ) புன்னை இ) சுரபுன்னை ஈ) பனை

V. பிச்சாவரத்தின் கடற்கரை நீளம் என்ன?
 அ) 6 மைல் ஆ) 5 கிலோ மீட்டர் இ) 6 கிலோ மீட்டர் ஈ) 6 மீட்டர்

**( அல்லது)**

<u>ஆ. பின்வரும் உரைநடைப் பகுதியைத் தொடர்ந்து வரும் வினாக்களுக்கு உரிய விடைகளை எழுது</u>

பொக்ரானில் இந்தியா இரண்டாவது அணுகுண்டை வெற்றிகரமாக வெடித்துச் சோதனை நடத்த மூளையாக இருந்து செயல்பட்டவர் தமிழ்நாட்டைச் சேர்ந்த பிரபல விஞ்ஞானி ஏ.பி.ஜே. அப்துல் கலாம். அப்துல் கலாம் இராமேசுவரத்தில் 1931-இல் பிறந்தவர். தந்தை பெயர் ஏ.பி.ஜேயினு லாப்தின் மரைக்காயர். தாயார் அஸீயா. திருச்சி செயிண்ட் ஜோசப் கல்லூரியில் படித்துப் பட்டம் பெற்றார். 1998-இல் இராஜஸ்தான் மாநிலத்தில் உள்ள பொக்ரானில்

இந்தியாவின் இரண்டாவது அணுகுண்டு வெற்றிகரமாக வெடித்துச் சோதித்துப் பார்க்கப்பட்டது. அந்த அரிய சாதனைக்கு 'மூளையாக' இருந்து செயல்பட்டவர் அப்துல் கலாம்ஆவார். அவருக்கு உறுதுணையாக இருந்தவர் இன்னொரு விஞ்ஞானி சிதம்பரம். அப்துல் கலாமின் சேவையைப் பாராட்டி இந்தியாவின் மிக உயர்ந்த விருதான 'பாரத ரத்னா' விருது அவருக்கு வழங்கப்பட்டது. மத்திய அரசின் பாதுகாப்புத்துறை ஆலோசகராக இருந்த அப்துல் கலாம் தமிழ் இலக்கியத்தில் மிக்க ஆர்வம் கொண்டவர். ஓய்வு நேரங்களில் கவிதைகள் வடிப்பார். சிறந்த பேச்சாளர்.

**<u>வினாக்கள்</u>**

I. பொக்ரான் என்ற இடம் எந்த மாநிலத்திலுள்ளது?
அ) மத்திய பிரதேசம் ஆ) இராஜஸ்தான்
இ) மகாராஸ்டிரம் ஈ) தமிழ்நாடு

II. அப்துல் கலாம் பிறந்த ஊர் எது?
அ) பொக்ரான் ஆ) சிதம்பரம்
இ) இராமேசுவரம் ஈ) இராஜஸ்தான்

III. பொக்ரானில் இரண்டாவதுமுறை அணுகுண்டு வெடிப்புச் சோதனை நடத்திய ஆண்டுஎது ?
அ) 1998 ஆ) 1988 இ) 2008 ஈ) 1978

IV. 'ஏ.பி.ஜே. அப்துல் கலாமிற்கு' இந்திய அரசு வழங்கிய விருதென்ன?
அ) பரம் வீர் சக்ரா ஆ) பத்ம பூஷண் இ) பாரத ரத்னா ஈ) பத்ம விபூஷண்

V. ஏ.பி.ஜே. அப்துல் கலாமிற்கு உறுதுணையாக இருந்த இன்னொரு விஞ்ஞானியின் பெயரென்ன ?
அ) வாஜ்பாய் ஆ) சிதம்பரம் இ) அஸீயா
ஈ) சிவசிதம்பரம்

2. <u>அ.பின்வரும் உரைநடைப் பகுதியைத் தொடர்ந்து வரும் வினாக்களுக்கு உரிய விடைகளை எழுது</u> 5x1=5

மலேரியா நோய்க் கிருமிகளைத் தாங்கி வருகின்ற கொசுக்கள் மனிதக் குருதியை விட அதிகமாக மனித உடலின் மணத்தினால் கவரப்படுவதாக அது குறித்து ஆராயும் விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளார்கள். மலேரியா நோய்க் கிருமியைத் தாங்கி வரும் கொசு, அந்தக் கிருமி இல்லாமல் வரும் கொசுவைவிட மூன்று மடங்கு அதிகமாக மனித

வியர்வை மணத்தினால் கவரப்படுவதாக அவர்கள் கூறுகிறார்கள். அதனால், இந்தக் கிருமிகளை தாங்கி வருகின்ற கொசுவினால் மனிதன் கடிபடும் வாய்ப்பு மூன்று மடங்கு அதிகமாக இருப்பதாக நெதர்லாந்தைச் சேர்ந்த விஞ்ஞானிகள் கூறுகிறார்கள். இவர்களே இதுபற்றி அதிகம் ஆய்வு செய்தவர்கள். இவ்வாறு நோய்க்கிருமிகளைத் தாங்கி வரும் அந்தக் கொசுக்கள் அதிகம் கவரப்படுவதற்கு. அந்த நோய்க்கிருமிகள் உயிர் வாழ்வதற்கான மற்றும் பெருக்கம் செய்வதற்கான முயற்சியும் காரணமாக இருக்கலாம் என்றும் அவர்கள் கூறுகிறார்கள்.

தமது இந்த ஆய்வுகள் மூலம் கொசுக்களைப் பிடிக்கும் பொறிகளை உருவாக்க உதவமுடியும் என்று அந்த விஞ்ஞானிகள் கூறியுள்ளனர்.

**<u>வினாக்கள்</u>**

I. மலேரியா நோய்க் கிருமிகளைத் தாங்கும் கொசுக்கள் எதனால் அதிகம் கவரப்படுகின்றன.?
   அ) மனிதக் குருதி ஆ) இரத்தம்
   இ) வியர்வை மணம் ஈ) மனித உடல்

II. மலேரியா கொசுக்கள் குறித்து அதிகம் ஆய்வு செய்தவர்கள்.யாவர்
   அ) இந்தியர்கள் ஆ) நெதர்லாந்து நாட்டினர்
   இ) ஆங்கிலேயர் ஈ) அயர்லாந்து நாட்டினர்.

III. மலேரியா கொசு மற்றவற்றைவிட வியர்வை மணத்தால் கவரப்படும் அளவு.
   அ) இரண்டு மடங்கு ஆ) பல மடங்கு இ) மூன்று மடங்கு ஈ) மற்றவை போல்.

IV. மேற்கண்ட கண்பிடிப்பின் பயன்.
   அ) கொசு பிடிக்கும் பொறிகளை உருவாக்கலாம்
   ஆ) கொசுக்களை அழிக்கலாம்.இ) மலேரியாவைக் குறைக்கலாம். ஈ) மேற்கண்ட எல்லாம்.

V. மனித வியர்வை மணத்தால் மிகவும் கவரப்படும் கொசு.
   அ) சாதாரண கொசு ஆ) மலேரியா கிருமி தாங்கிய கொசு இ) சுல்லான் ஈ) எதுவும் இல்லை.

**( அல்லது )**

**<u>ஆ.பின்வரும் பத்தியைப் படித்து அதனைத் தொடர்ந்து வரும் பலவுள் தெரிவு வினாக்களுக்கு விடையளி</u>:**

கலங்களை விண்ணில் ஏவும் இராக்கெட் தொழில் நுட்பத்தில் பெரும் திறமை கொண்ட மாதவன் நாயர் 1943. அக்டோபர் 31-ஆம் நாள் திருவனந்தபுரத்துக்கு அருகில் உள்ள நொல்யாற்றங்கரா என்ற இடத்தில் பிறந்தார்.பொறியியல் பட்டம் பெற்ற பின், பாபா அணு ஆராய்ச்சி நிலையத்தில் பயிற்சி பெற்ற இவர் விண்வெளி ஆராய்ச்சியில் தன்னை முழுவதுமாக ஈடுபடுத்திக் கொண்டார்.1967-இல் இருந்து, இத்துறையில் பல்வேறு பொறுப்புகளை ஏற்று செயல்பட்ட இவர், 2003 - ஆம் ஆண்டு இந்திய விண்வெளி ஆராய்ச்சிக் கழகத்தின் தலைவராகப் பொறுப்பேற்றார்.நம் நாட்டு ஆராய்ச்சி விண்கலங்களை வானில் ஏவ வெளிநாட்டு ஏவுகணைகளை நம்பி இருந்த நிலையை மாற்றி, விண்கோள் ஆராய்ச்சிக் கலங்களை வானில் ஏவும் இராக்கெட் ஆன பி.எஸ்.எல்.வி. என்ற ஏவுகணையை நம் நாட்டிலேயே வடிமைத்தார் இவர்.இந்த ஏவுகணை மூலம் விண்ணில் ஏவப்பட்ட நம் செயற்கைக்கோள்கள் பலப்பல. வெற்றிகரமாக நடத்தப்பட்ட விண்வெளி ஆராய்ச்சிகளும் ஏராளம்!மாதவன் நாயர் கடவுள் நம்பிக்கை மிக்கவர்.. ஸ்ரீ ஹரிகோட்டாவுக்குப் பக்கத்தில் இருக்கும்சூளுர்ப்பேட்டைசங்கலம்மா கோயிலுக்கு தவறாமல் சென்று வணங்குவார்.

வான் ஆராய்ச்சியின் மூலம் நாட்டு வளர்ச்சியும், சாதாரண மக்களின் முன்னேற்றமும் ஏற்பட பாடுபட்டவர் மாதவன் நாயர். இவருக்குபத்மபூஷன், பத்மவிபூஷன் உட்பட்ட பல விருதுகளும்,பதவிகளும் இந்திய அரசு கொடுத்து கௌரவித்தது.2009-இல் “உலகளாவியவான்நிபுணர்கள் குழுமம்” என்ற உயர்ந்த நிறுவனத்தின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, இப்பதவி வகிக்கும் அமெரிக்கர் அல்லாத முதல் இந்தியர் என்ற பெருமையைப் பெற்றிருக்கிறார்.

**<u>வினாக்கள்</u>**

நம் நாட்டு ஆராய்ச்சி விண்கலங்களை வானில் ஏவ வெளிநாட்டு ஏவுகணைகளை நம்பி இருந்த நிலையை மாற்றியவர் யார்?

(அ) மாதவன் நாயர் (ஆ) டாக்டர் பாபா
(இ) நாயர் (ஈ) மாதவன்

I. அவர் எவ்வாண்டு இந்திய விண்வெளி ஆராய்ச்சிக் கழகத்தின் தலைவராகப் பொறுப்பேற்றார்?

(அ) 2003 (ஆ) 2005 (இ) 2002 (ஈ) 2001

II. நம் நாட்டில் உருவாக்கப்பட்ட ஏவுகணையின் பெயரென்ன?

(அ) பி.எஸ்.எல்.வி (ஆ) ஏ.எஸ்.எல்.வி
(இ) வி.எஸ்.எஸ்.பி (ஈ) பி.எஸ்.எஸ்.பி

III. மாதவன் நாயர் எதன் மீது நம்பிக்கையுடைவர்?
(அ) கடவுள் (ஆ) இராக்கெட் (இ) அறிவியல்
(ஈ) தன்னம்பிக்கை

IV. எந்தாண்டு உலகளாவிய வான் நிபுணர்கள் குழுமத் தலைவராக அவர் நியமிக்கப்பட்டார்?

(அ) 2009-இல் (ஆ) 2008-இல் (இ) 2001-இல் (ஈ) 2007-இல்

3. **<u>பிழை நீக்கித் திருத்தப்பட்ட தொடர் எதுவெனக் கண்டறிந்து எழுதுக</u> [ ஐந்து மட்டும் ]** . 5x1=5

I. கடப்பாறை கொண்டு மலைநிலப்பாரையைப் பிளந்தனர்.

அ) கடப்பாரை கொண்டு மலைநிலப் பாரையைப் பிளந்தனர்.
ஆ)கடப்பாறை கொண்டு மலைநிலப் பாறையைப் பிளந்தனர்
இ) கடப்பாரை கொண்டு மலைநிலப் பாறையைப் பிளந்தனர்
ஈ) கடப்பாறை கொண்டு மலைநிலப் பாரையைப் பிளந்தனர்,

II. இரைவனின் பதமலர்கள் வழுத்துவார் எல்லா நளங்களும் பெறுவார்.

அ) இறைவனின் பதமலர்கள் வழுத்துவார் எல்லா நளங்களும் பெறுவார்
ஆ)இறைவனின், பதமலர்கள் வழுத்துவார் எல்லா நலங்களும் பெறுவார்
இ) இரைவனின் பதமலர்கள் வழுத்துவார் எல்லா நளங்களும் பெறுவார்
ஈ) இறைவனின் பதமலர்கள் வழுத்துவார் எல்லா நழங்களும் பெறுவார்

III. தூது இளக்கியம் சிற்றிளக்கிய வகைகளில் புகழ் பெற்ற ஒன்று.

அ) தூது இலக்கியம் சிற்றிலக்கிய வகைகளில் புகழ் பெற்ற ஒன்று

ஆ) தூது இளக்கியம் சிற்றிலக்கிய வகைகளில் புகழ் பெற்ற ஒன்று

இ தூது இளக்கியம் சிற்றிலக்கிய வகைகளில் புகழ் பெற்ற ஒன்று

ஈ தூது இலக்கியம் சிற்றிலக்கிய வகைகளில் புகல் பெற்ற ஒன்று

IV. கள்வி கர்பது நமது கடமை.

அ) கல்வி கர்பது நமது கடமை
ஆ) கல்வி கற்பது நமது கடமை
இ) கள்வி கற்பது நமது கடமை
ஈ ) கழ்வி கர்பது நமது கடமை

V. வயலில் கலை பறிப்பது உழவனுக்குக் கைவந்த களை.

அ) வயலில் களை பறிப்பது உழவனுக்குக் கைவந்த களை.
ஆ) வயலில் கலை பறிப்பது உழவனுக்குக் கைவந்த கழை
இ ) வயலில் கலை பறிப்பது உழவனுக்குக் கைவந்த களை.
ஈ) வயலில் களை பறிப்பது உழவனுக்குக் கைவந்த கலை.

VI. கினற்றில் தண்ணீர் பெறுகியது.

அ ) கிணற்றில் தண்ணீர் பெறுகியது.
ஆ கினற்றில் தண்ணீர் பெறுகியது
இ) கிணற்றில் தண்ணீர் பெருகியது
ஈ) கிணறில் தண்ணீர் பெறுகியது

4. **<u>வல்லின மெய்யிட்டுத் திருத்திய தொடர் எதுவெனக் கண்டறிந்து எழுதுக [ ஐந்து மட்டும் ]</u>** 5x1=5

I. குரவை கூத்திற்கு வந்து குழுமிய பெண்களே கேளுங்கள்.

அ) குரவைக் கூத்திற்கு வந்து குழுமிய பெண்களே கேளுங்கள்

ஆ) குரவை கூத்திற்கு வந்துக் குழுமிய பெண்களே கேளுங்கள்

இ) குரவை கூத்திற்கு வந்து குழுமிய பெண்களே கேளுங்கள்
ஈ) குரவைக் கூத்திற்கு வந்துக் குழுமிய பெண்களேக் கேளுங்கள்

II. குமணன் தமிழுக்கு தலையை தர முன்வந்தான்.

அ) குமணன் தமிழுக்கு தலையைத் தர முன்வந்தான்.
ஆ) குமணன் தமிழுக்குத் தலையை தர முன்வந்தான்.
இ) குமணன் தமிழுக்கு தலையை தர முன்வந்தான்.
ஈ) குமணன் தமிழுக்குத் தலையைத் தர முன்வந்தான்.

III. நிலவை பிடித்து சில கறைகள் துடைத்துக் குறுமுறுவல் பதித்த முகம்

அ) நிலவைப் பிடித்து சில கறைகள் துடைத்துக் குறுமுறுவல்
பதித்த முகம்
ஆ) நிலவைப் பிடித்துச் சில கறைகள் துடைத்துக் குறுமுறுவல்
பதித்த முகம்
இ) நிலவை பிடித்துச் சிலக் கறைகள் துடைத்துக் குறுமுறுவல்
பதித்த முகம்
ஈ) நிலவை பிடித்து சில கறைகள் துடைத்துக் குறுமுறுவல்
பதித்த முகம்

.

IV. தை திங்களில் பொங்கலை கொண்டாடுவது தமிழர் வழக்கம்.

அ) தைத் திங்களில் பொங்கலை கொண்டாடுவது தமிழர் வழக்கம்.
ஆ) தை திங்களில் பொங்கலைக் கொண்டாடுவது தமிழர் வழக்கம்.
இ) தைத் திங்களில் பொங்கலைக் கொண்டாடுவது தமிழர் வழக்கம்.
ஈ) தை திங்களில் பொங்கலை கொண்டாடுவது தமிழர் வழக்கம்.

V. எள்ளு செடியிலே வெள்ளை பூ பூத்தது.

அ) எள்ளுச் செடியிலே வெள்ளைப் பூ பூத்தது
ஆ) எள்ளு செடியிலே வெள்ளை பூ பூத்தது
இ) எள்ளுச் செடியிலே வெள்ளை பூ பூத்தது
ஈ) எள்ளு செடியிலே வெள்ளைப் பூ பூத்தது

VI. பத்துபாட்டும் எட்டுதொகையும் சங்க பனுவல்கள்.

அ) பத்துப்பாட்டும் எட்டுதொகையும் சங்க பனுவல்கள்.
ஆ) பத்துப்பாட்டும் எட்டுத்தொகையும் சங்க பனுவல்கள்.
இ) பத்துபாட்டும் எட்டுத்தொகையும் சங்க பனுவல்கள்.
ஈ) பத்துப்பாட்டும் எட்டுத்தொகையும் சங்கப் பனுவல்கள்

**5. <u>எடுத்துக்காட்டு எழுதுக [ஐந்தனுக்கு மட்டும்]</u>** 5x1=5

I. செய்தி வாக்கியம்

அ) அச்சம் தவிர்
ஆ) அஞ்சுவது அன்று ஆண்மை
இ) ஐயோ ! அஞ்சுகிறேன்
ஈ) அச்சமா ?எனக்கா?

II. கலவை வாக்கியம்

அ) பாரதியார் சிறந்த கவிஞர்.
ஆ) பாரதியார் சிறந்த கவிஞர்; தமிழகத்தைச் சேர்ந்தவர்; ஒருமைப்பாட்டை பேசியவர்.
இ) பாரதியார் தமிழகத்தில் பிறந்த போதும் ஒருமைப்பாடு பற்றி பேசினார்.
ஈ) பாரதியார் ஒருமைப்பாடு பற்றி பேசியவர் .

III. தனி வாக்கியம்

அ) நாமக்கல் இராமலிங்கனார் சிறந்த கவிஞர் ; ஓவியர் ; விடுதலை வீரர்
ஆ) நாமக்கல்லார் சிறந்த கவிஞர்; தமிழகத்தைச் சேர்ந்தவர் ஒருமைப்பாட்டை பேசியவர்
இ) நாமக்கல்லார் தமிழகத்தில் பிறந்த போதும் ஒருமைப்பாடு பற்றி பேசினார்
ஈ நாமக்கல் கவிஞர் தன்வரலாறு எழுதினார்.

IV. தன் வினைத்தொடர்
அ) நான் நன்றாகக் கதைகள் எழுதுவேன்
ஆ) பாண்டியர்களால் தமிழ் வளர்க்கப்பட்டது.
இ) மக்கள் தலைவர்களால் பாராட்டப்பட்டனர்.
ஈ) கோதை எப்பொழுதும் படிக்காமல் இருந்ததே இல்லை

V. செயப்பாட்டுவினைத்தொடர்

அ) திருக்குறள் சொல்லாதது எதுவும் இல்லை
ஆ) திருக்குறளில் வாழ்க்கை உண்மைகள் பல சொல்லப்பட்டுள்ளன. .
இ) திருக்குறளில் எல்லாப் பொருளும் உள்ளன.
ஈ) திருக்குறளில் இல்லாதது எதுவும் இல்லை

VI. பிறவினைத்தொடர்

அ) உலகம் உண்ண உண்.
ஆ) உலகம் உண்டபின் உண்
இ) உலகிற்கு உண்பித்த பின் உண்.
ஈ) உலகைப் பொதுவில் வை

6. **<u>பின்வரும் செய்யுளைப் படித்து அதனைத் தொடர்ந்து வரும் வினாக்களுக்கு விடையளி</u>:** **(5x1=5)**

" வையகம் பனிப்ப வலனேர்பு வளைஇப்
பொய்யா வானம் புதுப்பெயல் பொழிந்தென
ஆர்கலி முனைஇய கொடுங்கோல் கோவலர்
ஏறுடை இனநிரை வேறுபுலம் பரப்பிப்
புலம்பெயர் புலம்பொடு கலங்கி கோடல்

நீடுஇதழ்க் கண்ணி நீர் அலைக் கலாவ
மெய்க்கொள் பெரும்பனி நலிய பலருடன்
கைக்கொள் கொள்ளியர் கவுள்புடையூஉ நடுங்க*
மாமேயல் மறப்ப மந்தி கூரப்
பறவை படிவன வீழ கறவை
கன்றுகோள் ஒழியக் கடிய வீசி
குன்று குளிர்ப்பன்ன கூதிர்ப் பானாள்."

**வினாக்கள்**

I. இச்செய்யுள் இடம்பெற்ற நூல் எது ?
அ)புறநானூறு , ஆ)நெடுநல்வாடை .
இ) அகநானூறு . ஈ) அகநானூறு,.

II. இச்செய்யுள் எத்திணையைச் சார்ந்தது?

அ) பாடாண் ஆ)வாகை இ) காஞ்சி ஈ)வஞ்சி

III. இந்நூலின் பாட்டுடைத்தலைவன் யார் ?

அ) நன்மாறன் ஆ) பாண்டியன் நெடுஞ்செழியன்
இ) பெருஞ்சேரலாதன் ஈ) கரிகாலன்

IV. மறந்தன எவை ?

அ) குரங்குகள் ஆ) விலங்குகள் இ) பறவைகள் ,ஈ) ,பசுக்கள்,

V. ஆர்கலி , இச்சொல்லின் பொருள் யாது ?
அ) வெல்லம் ஆ) வெள்ளம் இ) தண்ணீர் ஈ) கடல்

.

**7. பின்வரும் பத்தியைப் படித்து அதனைத் தொடர்ந்து வரும் பலவுள் தெரிவு வினாக்களுக்கு விடையளி:**

5×1=5

இன்று சென்னை என்று அழைக்கப்படும் பகுதியும் அதன் சுற்றுபபகுதிகளும் வரலாற்றுக்கு முந்தைய காலத்திலிருந்தே மனிதன் வாழ்ந்ததற்கான தடயங்களைக் கொண்டுள்ளன. சென்னைக்கு

அருகேயுள்ள குடியம், அத்திரம்பாக்கம் போன்ற பகுதிகளில் மேற் கொள்ளப்பட்ட அகழாய்வுப் பணி, அப்பகுதியின் மனித நாகரிகத்தின் பழமையை ஒரு லட்சம் ஆண்டுகளுக்கும் முற்பட்டது என நிறுவுகிறது. அங்கு ஓடக்கூடிய கொற்றலையாற்றுப் படுகை மனித நாகரிகத்தின் முதன்மையான களங்களில் ஒன்று எனலாம். பல்லாவரத்தில் கண்டுபிடிக்கப்பட்ட கல் கோடரி, இந்திய அகழ்வாய்வுத்துறை வரலாற்றில் பெரும் திருப்புமுனையை ஏற்படுத்தியது. மேலும் கூடுவாஞ்சேரி பல்லாவரம், புழல் போன்ற பகுதிகளில் இன்றும் கிடைக்கும் தொல்பழங்கால மானுட எச்சங்கள் இப்பகுதியின் பழமையை நமக்கு உணர்த்துகின்றன. இன்று சென்னையின் ஒரு பகுதியாக விளங்கும் மயிலாப்பூர் , கி.பி. (பொ .ஆ.) 2ஆம் நூற்றாண்டில் தாலமி என்பவரால் 'மல்லியர்பா' எனும் துறைமுகமாகச் சுட்டப்பட்டுள்ளது. சென்னை நகரத்தில் பழமையான கோயில்களான திருவொற்றியூர் , திருவான்மியூர் , மயிலாப்பூர் , திருமுல்லைவாயில் ஆகியவற்றில் உள்ள கோயில்கள் பாடல் பெற்ற, ஆயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட தலங்களாக உள்ளன. பல்லாவரத்தில் உள்ள பல்லவர் குடைவரை , முதலாம் மகேந்திரவர்மன் காலத்தில் அமைக்கப்பட்டது. இங்குள்ள கல்வெட்டைச் சென்னையில் கிடைத்தவற்றுள் பழமையான கல்வெட்டு எனலாம்

**<u>வினாக்கள்</u>**

I. சென்னை எக்காலத்தின் தடயங்களைத் தன்னகத்தே கொண்டுள்ளது?

அ) வரலாற்றுக்காலம் ஆ)வரலாற்றுக்குப் பிந்தைய காலம்

இ) சோழர் காலம் ஈ) பல்லவர் காலம்

II. ஒரு லட்சம் ஆண்டுகளுக்கும் முற்பட்ட நாகரிகப் பழமையை உடையது என நிறுவும் இடங்கள்

அ) கூடுவாஞ்சேரி பல்லாவரம்,

ஆ)திருவான்மியூர் ,மயிலாப்பூர்

இ)குடியம், அத்திரம்பாக்கம் ஈ) குடியம், கூடுவாஞ்சேரி

III. தாலமி மயிலாப்பூரை எவ்வாறு குறிப்பிடுகிறார்?

அ) மல்லியர்பா' ஆ) மல்லியார்பா

இ) மல்லிப்பூர் ஈ)மசுலிப்பூர்

IV. மனித நாகரிகத்தின் முதன்மையைக் காட்டும் படுகை எது?

அ)அடையாற்றுப் படுகை ஆ) கூவப் படுகை
இ)பக்கிங்காம் படுகை ஈ) கொற்றலையாற்றுப் படுகை

V. பல்லாவரத்தில் உள்ள பல்லவர் குடைவரை யாரால் அமைக்கப்பட்டது ?
அ) நரசிம்ம பல்லவன் ஆ)முதலாம் மகேந்திர வர்மன்
இ) இரண்டாம் மகேந்திர வர்மன் ஈ) இராச சிம்மன்

8. <u>வழுவற்ற தொடரைத் தேர்வு செய்து எழுதுக.</u>

(5x1=5)

I. அ)கம்பராமாயணத்தை எழுதியது கம்பர் ஆகும்
ஆ)கம்ப ராமாயணத்தை எழுதியவர் கம்பர் ஆகும்
இ) கம்ப ராமாயணத்தை எழுதியவர் கம்பர் ஆவார்
ஈ) கம்பராமாயணத்தை எழுதியது கம்பர்

II. அ) கண்கள் படபடவென்று துடிக்கிறது
ஆ) கண்கள் படபடவென்று துடிக்கின்றன
இ) கண் படபடவென்று துடிக்கின்றன
ஈ) கண்கள் படபடவென்று துடித்துக்கொண்டிருந்தது

III. அ) வெக்கம் இல்லாமல் கட்சித் தாவி விட்டான்
ஆ) வெட்கமில்லாமல் கட்சி தாவிட்டான்
இ) வெட்கம் இல்லாமல் கச்சி தாவிட்டான்
ஈ ) வெட்கமில்லாமல் காட்சி தாவிட்டான்

IV. அ )நீங்கள் சொல்வன ஏற்றதன்று
ஆ) நீங்கள் சொல்வன ஏற்றதல்ல
இ) நீங்கள் சொல்வது ஏற்றதல்ல
ஈ) நீங்கள் சொல்வது சரியல்ல

V. அ) காட்டில் குயில் கத்தியது மயில் அகவியது
ஆ) காட்டில் குயில் கூவியது மயில் கத்தியது
இ) காட்டில் குயில் கூவியது மயில் அகவியது
ஈ) காட்டில் கூவின மயில் அகவின

## பகுதி -ஆ (section:B )(40 மதிப்பெண்கள்) (40 marks)

9. **பின்வரும் செய்யுள் வினாக்களில் எவையேனும் இரண்டனுக்குச் சுருக்கமான விடையளி.** [ 2×3= 6 ]

I. ஞாலத்து இருளகற்றுவன குறித்து எழுதுக

II. குகனொடும் ஐவர் ஆகி வீடணனோடு எழுவரான நிகழ்வுகளை எழுதுக

III. எவற்றையெல்லாம் விட நன்றி உயர்ந்தது விளக்குக

IV. நகரம் பட்டை தீட்டிய வைரம் ஆகிறது - விளக்குக

10. **பின்வரும் உரைநடை வினாக்களில் எவையேனும் மூன்றனுக்கு விடையளி.**

[ 3×4=12 ]

I. சங்க இலக்கிய ஒலிக்கோலம் குறித்து எழுதுக

II. பேரிடர் மேலாண்மை வாரியம் விளக்குக

III. பண்டைய விரிந்த குடும்பத்தில் தொடர்ச்சியே இன்றைய கூட்டுக்குடும்பம் விளக்குக

IV. சென்னையில் பண்பாட்டு அடையாளங்களில் இன்றும் நிலைத்திருப்பனவற்றைக் குறிப்பிடுக

V. தாயும் தந்தையும் பணிக்குச் செல்லும் இன்றைய சூழலில் குடும்ப உறுப்பினரான நீங்கள் குடும்பத்திற்கு செய்யும் உதவிகள் குறித்து எழுதுக

11. **<u>ஏதேனும் ஒன்று குறித்து துணைப்பாடக் கட்டுரை எழுதுக</u>** 1x7=7

I. முதல் கல் சிறுகதை காட்டும் மருதனின் பண்பு நலன்கள் குறித்து எழுதுக

II. தலைக்குளம் அல்லது உரிமைத்தாகம் கதையைஅதன் சுவை குன்றாமல் சுருக்கி வரைக

12. **<u>பின்வரும் தலைப்புகளில் ஒன்று பற்றிக் கடிதம் வரைக.</u>** **1×6=6**

உங்கள் பகுதியில் காவல் நிலையம் அமைத்துத் தருமாறு காவல்துறை உயரதிகாரிக்குக் கடிதம் ஒன்று எழுதுக:

(அல்லது)

சமூக ஊடகங்களைச் சரியாகப் பயன்படுத்தும் முறையைப் பற்றி நண்பனுக்குக் கடிதம் எழுதுக

[ எக்கடிதமாயினும் உம் முகவரி ப.தமிழ்நம்பி / ப.தமிழ்நங்கை ,30.தாடிக்காரசாமி தெரு, ஆலந்தூர், சென்னை-16 எனக் கொள்க ]

**13.** தண்ணீர்த் தட்டுப்பாட்டைச் சீர்செய்ய அரசு எடுத்துள்ள முயற்சி குறித்து குடிநீர் வடிகால் ஆணையரை நேர்காணல் செய்க. **1×3=3**

**[ அல்லது ]**

நீ விரும்பும் விளையாட்டு வீரர் ஒருவரை நேர்காணல் செய்க.

14. <u>பின்வரும் தலைப்புகளில் ஒன்று குறித்துக் கட்டுரை எழுதுக</u>.

1x6=6

I. அறிவை விரிவுசெய்; அகண்டமாக்கு
II. கட்டைவண்டி முதல் ஏவுகலம் வரை
III. சுதந்தர மனிதனும் சுற்றுச்சூழலும்